**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No : CC No.5/2021**
**Prosecution Witness : PW 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாபு | | : |
| Father / Husband Name | : தம்பிமுத்து | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( A2, A3 present. A1 absent. Counsel filed petition U/s.317 Of Cr.P.C. Petition heard and allowed. )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **25/04/2024**

**<u>முதல் விசாரணை ( அரசு தரப்பில் )</u>**

நான் தற்போது எண்.106, அம்பேத்கார் தெரு, சிறுங்காவூர் என்ற முகவரியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகமில்லை, கடந்த 2018ஆம் ஆண்டு ஒருநாள் சுமார் இரவு 12 மணியளவில் நான் அப்போது வேலை செய்த கன்னம்பாளையம் பெட்ரோல் பங்கிற்கு சிலர் வந்தார்கள். என்னுடைய வலது கண்ணில் அடித்தார்கள். இரவு நேரம் என்பதால், யார் வந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

**<u>அரசு தரப்பில் அ.சா.4 ஐ பிறழ்சாட்சியாக பாவிக்க கோரியதன் பேரில், நீதிமன்றம் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி பின்னர் நீதிமன்ற அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை</u>**

**<u>குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)</u>**

ராஜா என்பவரை எனக்கு தெரியும். நானும் ராஜாவும் எஸ்ஸார். பெட்ரோல் பங்கில் வேலை செய்து வந்தோம். நான் அந்த பெட்ரோல் பங்கில் வாட்ச்மேனாக வேலை பார்த்து வந்தேன். ராஜா என்பவர் பெட்ரோல் போடும் வேலை செய்து வந்தார். கடந்த 13.09.2018ஆம் தேதி 3 நபர்கள் டூவிலரில் பெட்ரோல் பங்கிற்கு வந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 3 நபர்கள் பெட்ரோல் போட சொன்னதற்கு ராஜா பெட்ரோல் போடமாட்டேன் என்று கூறினார் என்றால் சரிதான். மேற்படி நபர்களில் ஒருவர் அவரது தாயாரை மருத்துவமனையில் இருப்பதாக கூறி ரூ.50/-க்கு பெட்ரோல் போட சொன்னதின் பேரில் ராஜா பெட்ரோல் போட்டார். மேற்படி நபர்களிடம் பணம் கேட்டதற்கு ராஜாவையும் என்னையும்

தாக்கினார்கள். மேற்படி சம்பவம் சம்மந்தமாக ராஜா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆஜரில் நிற்கும் 2 நபர்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை. இது சம்மந்தமாகபோலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில் )</u>**

இல்லை.